
## திராவிடத்தால் வாழ்கிறோம்

935

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்


## கழகம் கண்ட சட்டப் போராட்டங்கள்

**தமிழ்.கா.அமுதரசன்**

18

கழகம் நடத்திய உயிர்ப்புமிக்க சட்டப் போராட்டங்களை உணர்வுப் பூர்வமாக விவரிக்கும் தொடர்!

# கலைஞருக்காக காத்திருந்த ஒரு சட்டம்!




*2006-ஆம் ஆண்டு மே மாதம் நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில் கழகம் வெற்றிபெற்று, ஐந்தாவது முறையாக ஆட்சிக்கட்டிலில் அமர்ந்தார் கலைஞர். அந்த ஐந்து ஆண்டு ஆட்சிக்காலம், தமிழ்நாட்டில் கல்விக் கட்டமைப்பில் பெரும் மாற்றங்களைக் கொண்டு வந்தார் முத்தமிழறிஞர் கலைஞர். 10-ஆம் வகுப்புவரை தமிழ்ப்பாடம் கட்டாயம், சமச்சீர் கல்வி என அவர் கொண்டுவந்த கல்வித்துறைச் சீர்திருத்தங்களில் முக்கியமானது ‘தொழிற்கல்விக்கான பொது நுழைவுத் தேர்வு ரத்து சட்டம்’.*

*மே 24, 2006 அன்று தமிழ்நாடு சட்டமன்ற முதல் கூட்டத்தில் ஆளுநர் உரையிலேயே, ‘நுழைவுத் தேர்வு ரத்து செய்யப்படும்’ என அறிவித்தார்.*

*“தொழில்முறைப் படிப்புகளில் சேருவதற்கான பொது நுழைவுத் தேர்வு மிகவும் விலை உயர்ந்ததாகவும், மாணவர்களுக்குத் தேவையற்ற சிரமத்தை ஏற்படுத்துவதாகவும் மாறிவிட்டது. கிராமப்புறங்கள், ஏழைக் குடும்பங்கள் மற்றும் நகர்ப்புறங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு சமமான நிலையை உறுதி செய்யும் நோக்கில், 2007-2008 கல்வியாண்டிலிருந்து பொது நுழைவுத் தேர்வை ஒழிப்பதற்கு பொருத்தமான நடவடிக்கைகளைப் பரிந்துரைக்க கல்வி நிபுணர்கள் குழுவை, இந்த அரசு அமைக்கும்” என அறிவித்தார் கலைஞர்.*

*அதன்படி, அண்ணா பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் டாக்டர் எம்.அனந்தகிருஷ்ணன் தலைமையில் கல்வி நிபுணர்கள் குழுவை அமைத்தது தமிழ்நாடு அரசு. 2006 -ஆம் ஆண்டு ஜூலை 7, உயர் கல்வித்துறை அரசாணை எண்: 206 மூலம் இந்தக் குழு அறிவிக்கப்பட்டு, தனது பணிகளைத் தொடங்கியது. அந்தக் கல்வியாண்டிலேயே நுழைவுத் தேர்வு இல்லாமல் மாணவர்சேர்க்கை நடக்க வேண்டும் என தீவிரம் காட்டினார் கலைஞர்.*

*டாக்டர். அனந்தகிருஷ்ணன் குழு தனது அறிக்கையை, நவம்பர் 13, 2006 அன்று அரசுக்கு சமர்ப்பித்தது. இந்தக் குழு, மிக முக்கிய மான பரிந்துரைகளை அளித்தது.*

**குழு அளித்த பரிந்துரைகள்**

*1. பொது நுழைவுத் தேர்வை நீக்குவதற்கு அரசாங்கம் உடனடி நடவடிக்கைகளை எடுக்கலாம்.*

*2. சமூக நீதி மற்றும் பாதிக்கப்படக்கூடிய மாணவர் மக்களின் பாதுகாப்பிற்காக, பொது நுழைவுத் தேர்வை நீக்குவதன் அவசியத்தைக் குறிக்கும் ஒரு மசோதாவை, அரசு நிறைவேற்றலாம்.*

*3. பல்வேறு வாரியங்களைச் சேர்ந்த மாணவர்களுக்குச் சேர்க்கைக்கான சம வாய்ப்புகளை உறுதி செய்யும் வகையிலான செயல்முறையைக் கொண்ட மசோதா முன்மொழியப்பட வேண்டும்.*

*இந்தக் குழுவின் பரிந்துரைகளை ஏற்ற கலைஞர், நுழைவுத் தேர்வை ரத்து செய்வதற்கான சட்டத்தை சட்டமன்றத்தில் கொண்டு வந்தார். மசோதா ஆளுநருக்கு அனுப்பப்பட்டு, பிப்ரவரி 3, 2007 அன்று தமிழ்நாடு அரசின் அரசாணையாக வெளியிடப்பட்டது.*

*முத்தமிழறிஞர் கலைஞர் கொண்டுவந்த இந்தச் சட்டத்தின் மூலம், தமிழ்நாட்டில் பொறியியல், மருத்துவம், பல் மருத்துவம், வேளாண்மை போன்ற தொழில்முறை பட்டப்படிப்பு மற்றும் அதன் பிற துணைப் படிப்புகளுக்கான சேர்க்கைக்கு 1984-ஆம் ஆண்டு முதல் தமிழ்நாட்டில் நிலவி வந்த பெரிய அழுத்தத்தின் கதவுகளைத் திறந்து விட்டார்.*

*‘மாநில கல்வி வாரியத்தால் பன்னிரண்டாம் வகுப்பு (பிளஸ்-டூ) படித்த மாணவர்கள் தேர்வில் பெறப்பட்ட மதிப்பெண்கள் சேர்க்கைக்கான அடிப்படை மதிப்பெண்களாக இருக்கும். பிற துறைகள் அல்லது வாரியங்கள் அல்லது பிரிவுகளின் மாணவர்கள் மாநில வாரியத்தின் பிளஸ்-டூ நிலையின் அதே பாடத்திட்டத்தில் உள்ள பொது நுழைவுத் தேர்வை எழுதுவார்கள். மாநில வாரிய மாணவர்கள் இந்தத் தேர்வை எழுதத் தேவையில்லை’ என கலைஞர் கொண்டு வந்த முடிவுதான் தமிழ்நாட்டின் பிற்படுத்தப்பட்ட, ஒடுக்கப்பட்ட மாணவர்களுக்குத் தொழிற் படிப்புகளுக்கான கதவுகளைத் திறந்துவிட்டது.*

**நுழைவுத் தேர்வு எனும் நச்சுப்பாம்பு!**

*அதற்கு முன்... 1984-ஆம் ஆண்டு அன்றைய அரசு கொண்டு வந்த நுழைவுத் தேர்வைப் புரிந்துகொண்டால், இன்றைக்கு நீட் தேர்வு வரை புரிந்து கொள்ளலாம். நீட் தேர்வு எனும் நச்சுப்பாம்புக்கு முன்னோடியாக, 1984-ஆம் ஆண்டில் நுழைந்ததுதான் தமிழ்நாடு தொழில்கல்விக்கான நுழைவுத் தேர்வு (TNPCEE). 1980-ஆம் ஆண்டு, பிற்படுத்தப் பட்டோர் இட ஒதுக்கீட்டில் பொருளாதார அளவுகோலைக் கொண்டுவந்து, அது ஏற்படுத்திய அரசியல் பாதிப்புகளால் பின் வாங்கியிருந்த எம்.ஜி.ஆர்., 1984-ஆம் ஆண்டு மார்ச் மாதம், தமிழ்நாடு தொழில்கல்விக்கான நுழைவுத்தேர்வை அறிவித்தார்.*

*அதன்படி, பொறியியல், மருத்துவம் உள்ளிட்ட மேற்படிப்புகளுக்கு இந்த நுழைவுத் தேர்வு மூலமே மாணவர்கள் தேர்ந்தெடுக்கப் படுவர் எனும் நிலை ஏற்பட்டது. சமூகநீதிக்கு எதிரான திட்டங்கள், சட்டங்கள் என்றால், எப்போதும் விட்டுக்கொடுக்காத தி.மு.க.வும், தி.க.வும் இந்த முறையும் இணைந்தே களத்துக்கு வந்தன.*

*“இது சமூக நீதிக்கு எதிரானது. இதனால், ஏழை மாணவர்கள் பாதிக்கப்படுவர். இது பிற்படுத்தப்பட்டோர் நலனுக்காகப் போராடிய, பெரியார் மற்றும் அண்ணாவின் கொள்கைகளுக்கு எதிரானது. எனவே, இந்த அறிவிப்பை உடனடியாக ரத்து செய்யவேண்டும்” எனப் போராட்டங்களை அறிவித்தன. ஆனால், எம்.ஜி.ஆர் “இந்தப் புதிய தேர்வுமுறையில் அதிக அளவில் பயனடைவதே பிற்படுத்தப்பட்ட மாணவர்கள்தான்” என வாதிட்டதுடன், எந்த காரணத்தினாலும் பின்வாங்க மாட்டேன் என உறுதியுடன் இருந்தார்.*

*23.06.1984 அன்று நுழைவுத் தேர்வு ஆணை நகல் எரிப்புப் போராட்டத்தை மிகத் தீவிரமாக முன்னெடுத்தது திராவிடர் கழகம். பிற்படுத்தப் பட்ட தாழ்த்தப்பட்ட மாணவர்களை உயர்கல்விக்குச் செல்லவிடாமல் தடுப்பதே நுழைவுத் தேர்வு என அரசியல் களத்தில் பல போராட்டங்களை முன்னெடுத்தது கழகம். மாநிலத்தில் கல்வி உரிமையை, பொதுப்பட்டியலுக்கு மாற்றியதை கண்டிக்காத, அதை மீட்டெடுக்க முயற்சிக்காத எம்.ஜி.ஆர், அரசு, நுழைவுத் தேர்வு ரத்து போராட்டங்கள் சொல்லும் செய்திகளையும் உள்வாங்கிக் கொள்ள தயாராக இல்லை. அந்தப் போராட்டத்தின் மையக் கருத்து கலைஞர் ஆட்சிக்காக காத்திருந்தது.*

> **“அரசியல் பாதிப்புகளால் பின் வாங்கியிருந்த எம்.ஜி.ஆர்., 1984-ஆம் ஆண்டு மார்ச் மாதம், தமிழ்நாடு தொழில்கல்விக்கான நுழைவுத்தேர்வை அறிவித்தார்.”**

...தொடரும்

## இந்துத்துவ சேவைக்கு உருட்டும் எடப்பாடி!

ஆகஸ்ட் 17 அன்று தேசிய ஜனநாயகக் கூட்டணியின் குடியரசுத் துணைத் தலைவர் வேட்பாளராக அறிவிக்கப்பட்டுள்ளார், தமிழ்நாட்டைச் சேர்ந்த சி.பி.ராதாகிருஷ்ணன்.

தமிழ்நாடு முன்னாள் பா.ஜ.க. மாநிலத் தலைவர் – தற்போதைய மகாராஷ்டிரா ஆளுநராக உள்ள சி.பி. ராதாகிருஷ்ணனை, குடியரசுத் துணைத் தலைவர் தேர்தலில் தமிழ்நாட்டின் அனைத்து எம்.பிக்களும் ஆதரிக்க வேண்டும் என எடப்பாடி பழனிசாமி கூறியுள்ளதற்கு கோடி மீடியா (Godi media) வேலை செய்கிறது என சமூகவலைதளங்களில் விமர்சனங்கள் எழுந்துள்ளன.

பத்திரிகையாளர் அருள் எழிலன் சமூக வலைதளப் பதிவில்,

“இதற்கு முன்பு தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள் ஜனாதிபதியாக இருக்கவில்லை. இப்போதுதான் முதன்முதலாக ஜனாதிபதி; இல்லை... இல்லை... துணை ஜனாதிபதியாவது போல ஒரு தோற்றத்தை கோடி மீடியா உருவாக்க நினைக்கிறது. அதற்குத்தான் இந்தத் தமிழர் உருட்டு.

தன்னை தமிழர் என்பதும் கொஞ்சம் கூடுதலாக தமிழ் தேசியவாதி எனச் சொல்ல இருப்பதையும் அவர் நமட்டு சிரிப்போடு ரசிப்பார். ராதாகிருஷ்ணனின் நாடி நரம்பெல்லாம் ஓடுவது இந்துத்துவா ரத்தம். ஆர்.எஸ்.எஸ். அமைப்பு, பா.ஜ.க.வுக்கு மாவட்ட, மாநில அளவுகளில் ஆட்களை அனுப்பும். அப்படி தனது 17 வயது முதல் ஆர்.எஸ்.எஸ். அமைப்பின் முழு நேர ஊழியராக இருந்து, ஜனசங்கம் மூலம் பா.ஜ.க.வுக்கு வந்தவர்.

படிப்படியாக பா.ஜ.க வுக்குள் வரவில்லை. கோவை குண்டு வெடிப்புக்குப் பின்னர் ரத்தம் தோய்ந்த மதப்பிரிவினை இந்து VS இந்து அல்லாத வாக்குகள் என கோவை பிளவுண்ட போது சி.பி.ராதாகிருஷ்ணன், கோவை தொகுதியில் வென்றார். அதற்கு முன்னர் அவர் ரத யாத்திரை எல்லாம் சென்றார். ஆனாலும், வெல்ல முடியவில்லை. மதக்கலவரம் அவருக்கு வெற்றியைக் கொடுத்தது.

தான் ஒரு தீவிர இந்து. தனது தேசியம் இந்து தேசியவாதம் என நம்பும் சி.பி. ராதாகிருஷ்ணனை தமிழர் என்றும், தமிழ்நாட்டைச் சேர்ந்தவருக்கு வாய்ப்பு கிடைத்துள்ளது என உருட்டுவதும் இந்துத்துவத்துக்குச் செய்யும் சேவை” எனப் பதிவிட்டுள்ளார்.

## ப்ளாஷ்பேக்



### தலைவருக்கு சால்வை அணிவித்து மகிழ்ந்தேன்!



மு.ராமலிங்கம்

24.09.1995 அன்று ஈரோடு மாவட்டம், சத்தியமங்கலம் வட்டத்தில் தமிழினத் தலைவர், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் கலந்துகொண்ட கழகப் பொதுக்கூட்டம் நடைபெற்றது. நிகழ்ச்சியின் போது தலைவர் அவர்களுக்கு சால்வை அணிவித்து, தேர்தல் நிதி அளிக்கும் வாய்ப்பைப் பெற்றேன். அப்போது எடுக்கப்பட்ட புகைப்படம் இது. உடன் அண்ணன் கழக முன்னோடி ஆற்காட்டார், இன்றைய பொதுச்செயலாளர் துரைமுருகன், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளராக இருந்த எவரெஸ்ட் மு.கணேசன் மற்றும் ராஜ்குமார் மன்றடியார் ஆகியோர் உள்ளனர்.

**– மு.ராமலிங்கம், சத்தியமங்கலம், ஈரோடு மாவட்டம்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 90033–24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்

### கோட்டை முன் பேரணி!

30.06.1962 விலைவாசி உயர்வுக்கு எதிராக திட்டமிட்டபடி, கோட்டை முன் பேரணியை நடத்தியது கழகம். காலை 8 மணி முதல் 11 மணி வரை நடைபெற்றது. சுமார் 30,000 பேர் இதில் பங்குகொண்டனர். அடுத்தநாள் ஜூலை முதல் தேதி, விலைவாசி உயர்வால் மக்கள் படும் அவதியை எடுத்துக்காட்டவும், விவசாய உற்பத்திக்கான பொருள்களின் விலையைக் குறைக்கவும், புதிய வரிகளைக் கண்டித்தும் தமிழ்நாடெங்கும் ஊர்வலமாகச் சென்று கண்டனக் கூட்டங்களை நடத்தியது.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131